**ஆங்கிலப் பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2017**

---

ஆங்கிலப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

ஆங்கிலப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

(அ) நியமத்தின் 42 ஆம் பந்தியின் பிரகாரம் நூற்றுக்கு நூறு தேய்மானத்திற்குள்ளாகிய சொத்துக்களது நியாயமான பெறுமதியை மீள மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமாயினும், நிறுவகம் 2017 சனவரி 01 இல் உள்ளவாறு முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாக்கிய ரூபா 479,508 கிரயமுடைய புத்தகங்களிலும் சஞ்சிகைகளிலும் மேலும் பயன்படுத்தப்பட்டவாறிருக்கும் புத்தகங்கள், சஞ்சிகைகள் என்பவற்றின் நியாயபூர்வமான பெறுமதி (Fair Value) யை கணக்குகளில் தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(ஆ) நியமத்தின் 86 ஆம் பந்தியின் பிரகாரம் சகல நிலையான சொத்துக்களதும் வருடாந்த தேய்மான வீதம் தெரியப்படுத்தப்பட வேண்டுமாயினும், நிறுவகத்தின் பொறித்தொகுதியும் இயந்திர சாதனங்களதும் (Plant and Machinery) தேய்மான வீதம் அவ்வாறு தெரியப்படுத்தப்படவில்லை.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான திறைசேரி உண்டியல் முதலீட்டுப் பெறுமதி ரூபா 46,761,464 ஆகும். பட்டோலைகளின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 47,031,800 ஆகியமையால் விளக்கமளிக்கப்படாத ரூபா 270,336 வித்தியாசம் நிலவியது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் XX அத்தியாயத்தினது 3.1 ஆம் பிரிவு | நிறுவகத்தின் கல்விசார் பதவியணியினர் வருவதையும் செல்வதையும் உறுதி செய்வதற்கான வரவு இடாப்பு பேணப்படவில்லை. வருவதை உறுதி செய்யாது 2017 ஆம் ஆண்டின்போது சம்பளமும் படியுமாக வழங்கப்பட்ட தொகை ரூபா 9,183,656 ஆகும். |
| (ஆ) 2011 சனவரி 27 ஆந் திகதிய PED/56 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | எந்தவொரு அரச நிறுவனத்திலும் மிகையான நிதி இருப்பின் எதிர்வரும் 06 மாதங்களுக்குத் தேவையான தொழிற்படு மூலதனத் தேவைக்கு அதிகமாக உள்ள தொகையைத் தவிர எஞ்சியவற்றை திறைசேரிக்கு அனுப்பி வைக்க வேண்டுமாயினும், அவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதிப் பெறுபேறு ரூபா 10,110,775 மிகை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,584,286 ஆவதால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேற்றில் ரூபா 6,526,489 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தில் ஏற்பட்ட ரூபா 6,541,098 அதிகரிப்பே மேற்படி அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்கையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 3,413,496 ஆகவிருந்த மிகை 2014 ஆம் ஆண்டில் ரூபா 2,400,723 வரை நலிவடைந்திருந்ததுடன், அதன் பின்னர் தொடர்ந்து அதிகரித்தவாறு மீளாய்வாண்டில் ரூபா 10,110,775 ஆகியிருந்தது. ஊழியர்களது ஊதியம், நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றை மேற்படி மிகையில் சீராக்கல் செய்யும்போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 8,819,530 ஆகவிருந்த நிறுவகத்தின் பங்களிப்பு தொடர் அதிகரிப்புக்குள்ளாகி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 21,075,415 ஆகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடும் மீளாய்வும்

ஆங்கிலத்தைப் போதிக்கும் கல்வியை அதிகரிக்கும் நோக்குடன் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிக்கும் நிதிசார் ஆற்றல் உள்ள நிறுவனம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் 2006 ஆம் ஆண்டில் இந்நிறுவகம் அமைக்கப்பட்டது. நிறுவகம் ஆரம்பமாகிய 2006 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியின்போது பட்டப்பின் படிப்புக் கற்கை நெறிகளையும் டிப்ளோமா கற்கை நெறிகளையும் பூரணமாக நிறைவேற்றிய மாணாக்கரது எண்ணிக்கை முறையே 39 மற்றும் 09 என்பனவாகும். கடந்த 03 ஆண்டுகளின் போது ஓரளவு முன்னேற்றம் தென்பட்ட போதும் நிறுவகத்தின் ஆரம்ப நோக்கை நிறைவேற்றுவதற்குப் பங்களிப்பதில் சிறந்த மட்டத்தை நிலை நாட்டுவதற்கு தொடர்ந்து இயலாதிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

திறந்த பல்கலைக்கழகத்திற்குரிய காணி ஒன்றின் உரித்தைச் சட்டபூர்வமாகப் பெறாது ரூபா 91,591,024 செலவில் ஆங்கில மொழி தொடர்பான பட்டப்பின் படிப்பு நிறுவகம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

## 4.3 நிதியம் குறைவாகப் பயன்படுத்தப்படுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரியிடமிருந்து வருடாந்தம் மூலதனச் செலவினத்திற்கெனப் பெறப்படும் பணம் பயன்படாதிருக்க, அதனைக் கருத்திற் கொள்ளாது தொடர்ந்து கோரிக்கைகளை விடுத்து மூலதன செலவினத்திற்கெனப் பணம் பெறப்பட்டிருந்தது. இதன் காரணமாக, 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளில் இவ்வாறு பெறப்பட்ட பணத்தில் முறையே ரூபா 44,676,212, ரூபா 35,829,434, ரூபா 17,189,312 என்பன எஞ்சியிருந்தன. இவ்வாறு எஞ்சிய தொகையில் மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறு ரூபா 44,761,464 குறுகியி கால முதலீடுகளிலிடப்பட்டிருந்தன.

(ஆ) நிறுவகத்தின் மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினங்களுக்கான காலப்பகுதியை நிர்ணயித்து அதற்கமைய தொழிற்படு மூலதனத் தேவைகளை இனங்கண்டு எஞ்சிய மிகையை குறுகிய கால முதலீடுகளில் ஈடுபடுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக, மீளாய்வாண்டின்போது ஏறக்குறைய ரூபா 03 மில்லியன் வங்கியின் நடைமுறைக் கணக்கிலும் சேமிப்புக் கணக்கிலும் தொடர்ந்தவாறிருந்தன.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது கல்விசார் பதவியணியினருக்கு சம்பளமும் படியுமாக ரூபா 10,314,906 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், நிறுவகத்தால் நடாத்தப்படும் விரிவுரைகள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் என்பவற்றில் 85 சதவீதத்துக்கும் மேற்பட்டவை வார இறுதி நாட்களிலேயே நடாத்தப்பட்டிருந்தன. அதன் பொருட்டு வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு ரூபா 841,250, நிறுவகத்தின் விரிவுரையாளர்களுக்கு ரூபா 290,000, கல்விசாராப் பதவியணியினருக்கு மேலதிக நேர வேலைக் கொடுப்பனவாக ரூபா 276,704 என வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகத்தின் ஆரம்பத்திலிருந்து மீளாய்வாண்டு வரை வார இறுதி நாட்களிலேயே விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்தன. அதற்கமைய, ஏனைய பல்கலைக்கழகங்களைப் போன்று வார நாட்களில் கல்விசார் பதவியணியினர் விரிவுரைகளில் ஈடுபட்டிராததும் மொத்த விரிவுரையாளர்களது 75 சதவீதத்துக்கும் மேற்பட்ட பங்களிப்பு வெளிவாரி விரிவுரையாளர்கள் மூலம் பெறப்பட்டிருப்பதும் அவதானிக்கப்பட்டது.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

திறந்த பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவால் இந்நிறுவகத்தின் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டபோதும், நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாமை போன்ற குறைபாடுகளைக் குறைத்துக் கொள்ளும் விதத்தில் உள்ளகக் கணக்காய்வு திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் என்பவற்றிற்கும் உள்ளவாறான வருமானம், செலவினம் என்பவற்றுக்கிடையே 60 முதல் 307 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் காணப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகததின் பணிப்பாளரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிதிக் கட்டுப்பாடு | (i) மூலதன நிதியேற்பாடு முறையாகப் பயன்படுத்தப்படாமை.<br>(ii) மிகையான பணத்தை குறுகிய கால முதலீடுகளில் இடாமை |
| (ஆ) உள்ளகக் கணக்காய்வு | நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டை சக்திமிக்கதாக்குவதற்கென உள்ளகக் கணக்காய்வை பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொள்ளாமை |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | முன்னைய ஆண்டுகளது வருமானத்தையும் செலவினத்தையும் மீளாய்வு செய்து பாதீட்டைத் தயாரிக்காமை. |
| (ஈ) சொத்து முகாமைத்துவம் | நிலையான சொத்துப் பதிவேட்டில் சில சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி, கிரயம் என்பன குறித்துக் கொள்ளப்படாமையும் பொருட் கணிப்பு அறிக்கைகளுக்கிடையே இணக்கமின்மையும் |